# பத்து கட்டளைகள்

**Dr . P V Jesudas**

கர்த்தர் உங்களை பெறுக்கமாக ஆசீர்வதிப்பாராக !

ஒரு சமயத்திலே பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஒரு நாஸ்திகன் கடவுள் இல்லை என்று போதித்து வந்தான். அவன் உலகத்தை சுற்றி பார்ப்பதற்காக கப்பல் பிரயாணத்தை மேற்கொண்டான் அவன் கடைசியாக நியுகினியா என்ற தீவிற்கு பக்கத்தில் வரும் போது திடிரென்று புயல் வந்து அந்த கப்பலை உடைத்து விட்டது. அநேகர் அதிலே மடிந்துபோனார்கள், ஆனால் இந்த நாஸ்திகனும் அவனுடைய நன்பனும் ஒரு பலகையை பிடித்துக் கொண்டு அந்த தீவில் கறைசேர்ந்தார்கள். அந்த தீவில் பெரிய மரங்களும் மலைகளும் இருந்தது. அங்கே நரமாமிச பட்சினிகள் அதாவது மனிதர்களை பிடித்து தின்னகூடிய மக்கள் அங்கே வசித்துவந்தார்கள். அவர்களிடத்திலிருந்து தப்பியோடி மரபுதர்களி டத்திலே இருவரும் ஒளிந்துகொண்டார்கள். அதிக நேரம் ஒளிந்தி ருக்க முடியாமல் என்ன செய்வது என்று தெரியாமல் மலை உச்சியில் ஏறி ஏதாவது வழியுண்டா என்று பார்த்தார்கள் அப்பொழுது அங்கே துாரத்திலே ஒரு கோவிலின் கோபுரம் தெரிந்தது. அப்பொழுது அந்த நாஸ்திகன் தன் நன்பனிடம் நாம் இனி பயப்படவேண்டிய அவசியமில்லை அதோ ஒரு கிறிஸ்தவ கோவில் தெரிகிறது அதனால் இந்த தீவிலே கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், கிறிஸ்தவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே நரமாமிச பட்சினிகள் இருக்கமுடியாது என்று சொல்லி தைரியமாக புறப்பட்டுபோனார்கள். அங்கே அந்த மக்கள் கிறிஸ்வர்களாக நல்லவர்களாக இருந்ததை கண்டு இருவரும் மகிழ்ச்சியுற்றார்கள். அந்த நாஸ்திகன் கிறிஸ்தவத்தில் பத்து கட்டளைகள்தான் இந்த நரமாமிச பட்சினிகளை மாற்றியிருக்கிறது என்று எழுதினார். அந்த நாஸ்திகனின் பெயர்தான் வால்டர்.

பாம்பீ என்ற ரோமப்படைதலைவன் ஆங்கில நாட்டிற்கு படையெ டுத்து சென்றபோது அம்புகளும் ஈட்டிகளும் கற்களும் அவர்கள் மேலே வந்து விழுந்தது. அந்த ஆங்கில மக்கள் மரத்திலே ஏறி சண்டையிட்டு கொண்டிருந்தார்கள். அந்த மக்கள் வாழ்ந்த வீடு களும் அந்த மரத்திலேதான் இருந்தது. அதனால் அந்த ரோமர்கள் அவர்களை வெள்ளை குரங்கு என்று அழைத்தார்கள். அப்படிப் பட்டவர்களிடத்திலே சத்தியம் போய் சேர்ந்து நாடு முழவதும்



கிறிஸ்தவ நாடாக மாறி இன்று பெரிய வல்லரசாக மாறிவிட்டார்கள். அமெரிக்கநாடு ஒரு நாகரீகமான நாடுதான் ஆனால் அன்று அங்கு அடிமை வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. அடிமைகளை விற்று வேலைவாங்கினார்கள் இது அநாகரிகமானதொரு காரியமே. ஆனால் அவர்கள் மத்தியிலே கிறிஸ்தவ மார்க்கம் போனபோது ஆபிரகாம் லிங்கன் போன்றவர்கள் அந்த அடிமைத்தனத்தை ஒழித்து, எல்லோரும் சமம் என்பதை நிலைநாட்டி ஒரு சீர்த்திருத்தை கொண்டுவந்தார்கள். இன்றைக்கு விஞ்ஞானிகள் இந்த உலகத்தின் நாகரீகத்தை அலசிபார்த்து செல்லுவது என்ன வென்றால்: இந்த உலகத்தை சீர்திருத்தி செம்மைப்படுத்தி மக்கள் வாழ்விலே ஒரு நல்வாழ்வு கொண்டுவந்த விசேஷமான காரியம் இறைவன் கொடுத்த பத்து பிரமாணமே என்று சொல்லுகிறார்கள்.

<u>இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத்தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன்; என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு. அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல திராட்சச் செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக்கட்டி, அதில் ஆலையையும் உண்டுபண்ணி, அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று காத்திருந்தார்; அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது.</u> ஏசாயா 5. 1, 2

மனித சமுதாயத்திற்கு ஒரு வேலி தேவைப்படுகிறது. நாம் கெட்டுபோகாமல் நன்றாக வாழுவதற்கு நமக்கு ஒரு வேலியாக அந்த பத்து பிரமாணத்தை (பத்து கட்டளைகளை) ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு வைக்கிறார். பெரும் ஞானியான சாலமோன் தன்னுடைய நீதிமொழிகள் , உன்னத பாட்டு, பிரசங்கி என்ற புத்தகங்களை எழுதிவிட்டு கடைசி யாக ஒன்று சொல்லுகிறார். <u>என் மகனே! இவைகளினாலே புத்தியடைவாயாக; அநேகம் புஸ்தகங்களை உண்டுபண்ணுகிறதற்கு முடிவில்லை; அதிகபடிப்பு உடலுக்கு இளைப்பு. காரியத்தின் கடைத் தொகையை கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே.</u> பிரசங்கி 12. 12, 13

இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனின் கடமை தேவனுக்கு பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்

கொள்ளவேண்டும். இது எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை. ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியமும், நண்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே( பத்து கற்பனைகளுக்கு முன்பாக) கொண்டு வருவார். இது கடைசிக்காலத்திலே அவர் வரும்போது நடக்கும். பத்து கற்பனையால்தான் நம்மை அவர் நியாயந் தீர்ப்பார்.



பகுத்தறிவு


இப்படி ஆண்டவருடைய வேதம் சொல்லும்போது மனிதர்களோ தங்களுடைய சொந்த யோசனைகளினாலே அநேக வழிகாட்டிகளை உண்டுபண்ணியிருக்கிறார்கள். பகுத்தறிவு தங்களுடைய வாழ்கையை சரிப்படுத்தும் என்று நினைக்கிறார்கள். இந்த பகுத்தறிவு ஓரளவுக்கு நமக்கு சில காரியங்களை சொல்லதான் செய்கிறது. ஆனால் இந்த பகுத்தறிவை நம்பி நாம் வாழ்க்கை நடத்தமுடியுமா? அது நமக்கு சரியாக வழிகாட்டுமா? சிலர் நண்மையான ஒரு காரியத்தை செய்வதற்கு ஏதாவது ஒரு வழியை கடைப்பிடித்தால் போதும் என்று நினைக்கிறார்கள். உதாரணத்திற்கு ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை நடத்திவை என்று சொல்லு கிறார்கள். ஆகவே திருமணம் ஒரு நல்ல காரியம், ஆனால் நல்லபடியாக நடத்த பொய் சொல்ல நேரிட்டால் அதை சொல்லி அந்த கல்யாணத்தை நடத்து என்று பகுத்தறிவுக்காரர்கள் நினைக்கிறார்கள். இன்றைக்கு மந்திரவாதிகளும் ஒருவருக்கு நண்மை செய்வதற்காக தீமையான காரியங்களை கைக்கொள்ளு கிறார்கள். பகுத்தறிவு என்பது தேசத்திற்கு தேசம், கலாச் சாரத்திற்கு கலாச்சாரம், மார்க்கத்திற்கு மார்க்கம் மாறுப் படுகிறது. இந்து சகோதரர்கள் சிலையை வணங்கும்போது அது பாவம் என்று அவர்களது பகுத்தறிவு சொல்லுவதில்லை. ஆனால் மகமதியர்களோ அல்லது சில கிறிஸ்தவர்களோ சிலையை வணங்குவது கிடையாது. இது கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் மாறுப்படுகிறது. நீதிநெறிபுத்தகங்கள் ஒரு சரியான வழிகாட்டி யாகாது அது சமுதாயத்தையும் கட்டாது. பெரியோர்களை பின்பற்றினால் போதாதா? என்று சிலர் நினைக்கிறார்கள். திருவள்ளுவரை பின்பற்றினால் என்ன? புத்தரை பின்பற்றினால் என்ன? கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை பின்பற்றினால் என்ன? மகமதியர்கள் மகமதுவை பின்பற்றினால் என்ன? மனிதர்களாகிய நமக்கு எத்தனைவிதமான வழிகாட்டிகள் தேவை? இந்த உலகத்தில் எது நண்மை? எது தீமை? எது நல்லது? எது பாவம்? என்ற கொள்கைக்கு இந்த உலகத்தில் பல்வேறு குழப்பங்கள் இருக்கிறது.

பாவம் என்றால் என்ன?

இந்த உலகத்தில், மக்கள் மத்தியில், பாவ அறிவு கிடையாது. திருடுகிறவன் துனிகரமாக திருடுகிறான். பாவ உணர்வு அவனுக்கு கிடையாது. கொலை செய்கிறவன் துனிகரமாக கொலை செய்கி றான். அவனுக்கு பாவ உணர்வு கிடையாது. இன்றைக்கு உலகத்தில் பாவம் என்பது என்ன? என்ற ஒரு திட்டவட்டமான கொள்கை இல்லை. இரட்சிப்பு அடையவேண்டுமென்றால் பாவ உணர்வு வேண்டும். இந்த உலகத்தில் அதற்கு மதிப்பும் மரியாதையும்



கிடையாது. ஆகவே இந்த பாவ அறிவை உணர்த்தும் படியாகவும் மக்களுடைய வாழ்கையை சீர்ப்படுத்தவும் பரலோகத்தின் தேவனே இந்த உலகத்திற்கு வந்து அந்த பாவத்தை சுட்டிகாட்டவும் பாவத்தை நாம் செய்யாதபடிக்கும் நமக்கு ஆண்டவர் பத்து கற்பனைகளை கொடுத்தார் என்று வேதம் சொல்லுகிறது. இந்த பத்து கற்பனைகள் எவ்வளவு முக்கியம் என்று காட்டுவதற்காக ஆண்டவரே இந்த உலகத்திற்கு வந்தார். அவர் எப்படி வந்தார் ?




## பத்து கற்பனைகள்

மூன்றாம் நாள் விடியற்காலத்தில் இடிமுழக்கங்களும் மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயிற்று; பாளயத்திலிருந்த ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். அப்பொழுது ஜனங்கள் தேவனுக்கு எதிர்கொண்டுபோக, மோசே அவர்களைப் பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; அவர்கள் மலையின் அடிவாரத்தில் நின்றார்கள். **கர்த்தர்** சீனாய்மலையின்மேல் அக்கினியில் இறங்கினபடியால், அது முழுவதும் புகைக்காடாய் இருந்தது; அந்தப் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; மலை முழுவதும் மிகவும் அதிர்ந்தது. எக்காளசத்தம் வரவர மிகவும்



பலமாய்த் தொனித்தது; மோசே பேசினான்; தேவன் அவனுக்கு வாக்கினால் மறுமொழி கொடுத்தார். **கர்த்தர்** சீனாய்மலையிலுள்ள கொடுமுடியில் இறங்கினபோது, **கர்த்தர்** மோசேயை மலையின் கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே ஏறிப்போனான். யாத் 19.16-20 **ஆண்டவர் சீனாய் மலையிலே இறங்கினபோது பெரிய பூமியதிர்ச்சியும் இடியும் மின்னலும் கார்மேகங்களும் வந்தது. அதோடுகூட எக்காள சத்தமும் கேட்டது. அந்த எக்காள சத்தம் வரவர மிகவும் பலமாக தொனித்தது. இந்த எக்காள சத்தத்தை யார் ஊதினார்கள்?** **கர்த்தர்** சீனாயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்; பாரான் மலையிலிருந்து பிரகாசித்து, பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார்; அவர்களுக்காக அக்கினிமயமான பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது. உபாகமம் 33.2 **இங்கு கற்பனைகளை கொடுப்பதற்கு ஆண்டவர் பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பதினாயிரங்களான பரிசுத்த வான்கள் யார் ?** தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது, ஆண்டவர் பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்தவண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார். சங்கீதம் 68.17 தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான். அப் 7.53 **பரிசுத்தவான்கள் தேவதுாதர்கள் அந்த இடத்திலே வந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஆண்டவர் தமது இரண்டாம் வருகையில் எப்படி அநேக துாதர்களோடு எக்காள சத்ததோடு முக்கியப்படுத்தி வருவரோ அதேபோல இந்த பத்து கற்பனையை கொடுத்தபோதும் அதே வண்ணமாக பரிசுத்த தேவதுாதர்களோடும் எக்காள சத்ததோடும் வந்தார். எவ்வளவு முக்கியப்படுத்தினார் என்பதை பாருங்கள்.** நீர் சீனாய் மலையிலிறங்கி வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குச் செம்மையான நீதிநியாயங்களையும், நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர். நெகேமியா 9.13 அவர்கள் பசிக்கு வானத்திலிருந்து அப்பம் கொடுத்து, அவர்கள் தாகத்துக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, நீர் அவர்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் பிரவேசியுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னீர். நெகேமியா 9.15 இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், **அவர்களோடேகூடச் சென்ற** ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை **கிறிஸ்துவே.** 1 கொரி 10.1-4 **ஆகவே இங்கு அந்த பத்து கற்பனையை கொடுத்தது கிறிஸ்து என்று சுட்டிகாட்டுகிறது. இஸ்ரவேல் ஜனங்களை நடத்தினவர்**

கிறிஸ்துவே என்று ஆண்டவர் பேரிட்டு காட்டுகிறார். பிதா குமாரன், பரிசுத்த ஆவி என்று மூன்று பேர் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் எடுக்கும்போது அங்கு பரிசுத்த ஆவியானவர் புறாவைபோல வருகிறார். பிதாவானவர் அங்கு வானத்திலிருந்து சத்தமிடுகிறார். இங்கு மூன்று பேர் வித்தியாசமாக இருக்கிறதை நாம் பார்க்கவேண்டும். என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை. யோவான் 5.37 அப்படியானால் ஆதாமிடம் பேசினது யார்? ஆகவே அந்த பத்து கற்பனைகளை நமக்கு கொண்டுவந்தது அந்த இயேசு கிறிஸ்துவே என்று வேதம் சொல்லுகிறது. அண்டசரா சரங்களை படைத்தவர் இயேசு கிறிஸ்து, ஆபிரகாமை அழைத்தவர் இயேசு கிறிஸ்து, இஸ்ரவேலரை நடத்தினவர் இயேசு கிறிஸ்து, சீனாய் மலையில் இறங்கினவர் இயேசு கிறிஸ்து, மனுஷனாக பிறந்தவர் இயேசு கிறிஸ்து, பரலோகத் தில் ஏறிபோனவர் இயேசு கிறிஸ்து, திரும்ப வரபோவதும் இயேசு கிறிஸ்துதான். மனுகுலத்திற்கு வெளிப்படுத்தப் பட்டவர் இயேசு கிறிஸ்து. ஆகவே ஆண்டவர் அந்த பத்து கற்பனையை கொடுக்கும்போது முதலில் 40 நாள் மோசே யோடே இருந்தார். ஒரு முறை அவர் அந்த பத்து கற்பனையை எழதிகொடுத்தபோது அந்த இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு பொன் கன்று குட்டியை உண்டாக்கி அதை வணங்கும்போது மோசே அந்த கற்பனைகளை உடைத்துபோட்டார்.





திரும்ப வேறு கற்பனைகளை எடுத்து கொண்டுபோனபோது பின்பும் மோசே 40 நாள் ஆண்டரோடுகூட இருந்தார். ஆகவே பரலோகத்தின் தேவன் சீனாய் மலையிலே வந்து ஆயிரக்கணக்கான தேவதுாதர்களோடும் பரிசுத்தவான்களோடும் மோசேயோடும்கூட மொத்தம் 80 நாள் இருந்தார். அப்படியானால் அதனுடைய முக்கியத்தை நாம் சற்று கவனிக்கவேண்டும். எவ்வளவு பெரிய முக்கியத்தை ஆண்டவர் அந்த கற்பனைக்கு கொடுத் திருக்கிறார் என்று சிந்தித்து பாருங்கள். இந்த வேதபுத்தகத்தை அநேக தீர்க்கதரிசிகளும் பரிசுத்த வான்களும் எழுதினது. ஆனால் ஆண்டவரோ தம்முடைய சொந்த விரலினாலே அந்த பத்து கற்பனைகளை எழுதி கொடுத்தார். இந்த பத்து கற்பனையை கொடுத்த காலம் ஏறகுறைய கி. மு 1500 ஆண்டு. அதற்கு முன்பு அந்த பத்து கற்பனை இருந்ததா ? ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால், ஆதி 26.4 இங்கு ஆபிரகாமுக்கு இந்த பத்து கற்பனைகள் நன்றாக தெரிந்திருந்தது. அவன் அவர்களை நோக்கி: **கர்த்தர்** சொன்னது இதுதான்; நாளைக்குக் **கர்த்தருக்குரிய** பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றான். யாத் 16.23 இங்கு ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மன்னாவை கொடுத்தபோது பத்து கற்பனையை கொடுப்பதற்கு முன்பாகவே பரிசுத்த ஓய்வு நாளை குறித்து பேசுகிறார். ஆகவே பத்து கற்பனைகள் ஆண்டவர் எழுதிகொடுப்பதற்கு முன்பாகவே வார்த்தையாலே சொல்லியிருக்கிறார்.

## முதலாம் கற்பனை


என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். யாத் 20.3 கடவுள் என்றால் வணக்கத்திற்குறியவரும் தொழுகைக் குறியவரும் என்று பொருள். நமக்கு ஒரு தாய்தான் இருக்க முடியும். பெற்றவள்தான் தாய் , பெற்றெடுக்காதவள் நமக்கு தாயாக இருக்க முடியாது. அதேபோல நமக்கு ஒரு தெய்வம் தான் இருக்கமுடியும், மற்ற தெய்வங்களை நாம் தெய்வமாக ஏற்றுக்கொள்ளமுடியாது. எரேமியா 10ம் அதிகாரத்திலே வானத்தையும் பூமியையும் படைத் தவர் கர்த்தர் என்று போட்டிருக்கிறது. அப்படி படைக்காதவர்கள் கடவுளாக இருக்கமுடியாது. கடவுள் என்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. நாம் அவரைதான் வணங்கவேண்டும். அவரை

**விட்டு இன்னொரு தெய்வத்தை ஆராதனை செய்யகூடாது. சாத்தான் இயேசு கிறிஸ்துவை சோதிக்கும் போது** மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து,



என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். மத்தேயு 4.8,9,10

அவர் ஒருவருக்கே ஆராதனை செய்ய வேண்டும். *பய்யூரிலேயிருந்து பொய்யூரிலே பிறந்து மெய்யூருக்கு போக வேதாந்த வீடறியேன், மெய்யூருக்கு போக வேதாந்த வீடறிந்தால் பய்யூரும் பொய்யூரும் பாழாய்முடியாதோ ?* என்று ஒரு சித்தர் பாடினார்.(பய்யூர் என்பது தாயின் கற்பப்பை) அங்கே குழந்தை உருவாகி பத்து மாதம் கழித்து (பொய்யூர் என்பது இந்த உலகம்) இந்த உலகத்திற்கு வருகிறது. இந்த உலகத்திற்கு வருகிற அந்த குழந்தை பெரிதாகி( மெய்யூர் என்பது பரலோகம் ) பரலோக வீட்டிற்கு எப்படி போகமுடியும்? பய்யூரிலிருந்து இந்த பொய்யூரக்கு வர தாயென்று ஒரே வழிதான். அதேபோல இந்த பொய்யூரி லிருந்து மெய்யூருக்கு போக இறைவனென்ற ஒரே வழிதான். தாய் இரத்தம் சிந்தி தன்னுடைய குழந்தையை பெறுவதுபோல இறைவன் இரத்தம் சிந்தி தம்முடைய பிள்ளைகளை மீட்க வேண்டும். பிரசவவேதனைப்படுவதைபோல அந்த இறைவன் நம்மை மீட்கத்தக்கதாக வேதனைப்பட்டவராக இருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவை குறிக்கிறதல்லவா ? ஆகவே அவர்தான் நமக்கு உண்மையான தெய்வம். அவரேயே பணியவேண்டும். இரண்டு எஜமான் களுக்கு ஊழியம் செய்ய ஒருவராலும் கூடாது என்று சொல்ல ப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டு பேரை நாம் வணங்க முடியாது அதனால் ஒருவரை மாத்திரம்தான் நாம் ஆராதிக்கவேண்டும்.






**இரண்டாம் கற்பனை.**

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய **கர்த்தராயிருக்கிற** நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன். யாத் 20.4,5,6 இங்கு ஆண்டவர் மூன்று காரியத்தை சொல்லுகிறார். விக்கிரகத்தை *உண்டாக்க வேண்டாம், நமஸ்கரிக்கவேண்டாம், சேவிக்கவேண்டாம்* என்று சொல்லுகிறார். விக்கிரகத்தை வணங்குவது தவறு என்று வேதம் ஏன் பேசுகிறது? தெய்வம் ஒருவர் இருக்கும்போது பிசாசானவன் தன்னையும் வணங்கவேண்டும் என்று அவன் நினைத்தான். தன்னை வணங்கவேண்டுமென்று அவன் பல ரூபங்களை மனுஷ னுக்கு காட்டி தன்னையே மறைத்து அதற்கு பதிலாக விக்கிர கங்களை வணங்கசெய்தான். சற்று சிந்தித்து பார்ப்போம் தேவன் ஒருவர் இருக்கிறார் என்று நாம் அறிவோம் , அவரை விட்டுதள்ளி பல ரூபங்களை கொண்ட சிலைகளை வணங்கினால் நாம் யாரை வணங்குகிறோம் நமஸ்கரிக்கிறோம் சேவிக்கிறோம் என்று சிந்தி த்துபார்க்கவேண்டும். இன்றைக்கு மக்கள் இந்த ரூபங்களை

செய்வது கடவுளை நினைப்பதற்கு ஒரு வழியாக இருக்கிறது என்று சொல்லு கிறார்கள். ஆனால் அந்த விக்கிரகங்கள் நமக்கு செவிகொடுத்து பதில் அளிப்பதில்லை. நம் ஆண்டவரோ அந்தரத்தில் பார்க்கிற பிதா நமக்கு வெளியரங்கமாய் பதிலளிப்பார் என்று வேதம் சொல்லுகிறது.

**பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே.**
**ரோமர் 7:8**



மூன்றாம் கற்பனை.

உன் தேவனாகிய **கர்த்தருடைய** நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; **கர்த்தர்** தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார். யாத் 20.7 ஆண்டவருடைய நாமத்தை அடிக்கடி இயேசு இயேசு இயேசு என்று சொல்லலாமா? தேவனுடைய சநிதானத்திற்கு முன்பாக நிற்கிற சேராபீன்கள் என்ற துாதர்கள் தனது இரண்டு இறக்கைகளினாலே முகத்தை மூடி தனது இரண்டு இறக்கைகளினாலே உடம்பை மூடி தனது இரண்டு இறக்கைகளினாலே பறந்து பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று வணங்குகிறார்கள். ஆகவே இறைவனுடைய சந்நதி ஒரு பயபக்தியாக வணங்கக்கூடிய ஒரு சந்நதியாக கறுதவேண்டும். அந்தவிதமான சந்நதிக்கு முன்பாக நாம் சத்தம் போடலாமா? அல்லேலூயா ! கைதட்டி இயேசுவே என்று ஒரே சத்தம் போடுகிறோம் இப்படி செய்தால் தேவன் மகிமைப்படுவாரா? அவருக்கு அதிக மரியாதை கொடுக்க வேண்டுமல்லவா? பயபக்தியோடு அமைதலாக நாம் அவரை சேவிப்பதே அவர் விரும்புகிறார். அதைவிட்டு அவருக்கு அவமானத்தை கொடுக்ககூடாது. ஆண்டவருடைய நாமத்தை அடிக்கடி சொல்லி நாம் அவருடைய நாமத்தை வீணிலே வழங்ககூடாது. ஒரு மணைவி தன் புருஷனின் நாமத்தை அடிக்கடி சொல்லி கூப்பிடமுடியுமா? ஒரு மகன் தன் தகப்பனின் நாமத்தை சொல்லி கூப்பிடமுடியுமா? ஆண்டவர் இவர்களுக்கெல்லாம் மேலானவராகயிருக்கிறார். அவருடைய நாமத்திற்கு பெரிய மதிப்பு மரியாதை உண்டு. அவருடைய நாமத்திற்கு ஒரு கனமுண்டு யூதர்கள் இன்றுவரை யேகோவா என்ற வார்த்தையைப் படிக்கமாட்டார்கள். ஏனென்றால் கடவுளு டைய நாமத்தை நாம் உச்சரிக்ககூட கூடாது என்று நினைத் தார்கள். எவ்வளவு பக்தி பாருங்கள்! ஆகவே அப்படி அவருடைய நாமத்தை நிந்திக்கிறவர்களை ஆண்டவர் தண்டிக்காமல் விடமாட்டார் என்று சொல்லுகிறார்.

**நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமல் இருக்கிறீர்களா?**
**ரோமர் 7:1**



நான்காம் கற்பனை

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய **கர்த்தருடைய** ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். **கர்த்தர்** ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், **கர்த்தர்** ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். யாத் 20.8,9,10,11 இந்த கற்பனை ஒரு பெரிய கற்பனையாக கருதப்படுகிறது. வேறு எந்த கற்பனையிலும் நினைப்பாயாக என்று எழுதப்படவில்லை. கர்த்தர் அந்த ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்த மாக்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆறு

நாளைக்குள்ளே இந்த உலகத்தை படைத்து ஏழாவது நாளில் நீ நினைவுகூற அந்த ஓய்வுநாளை பரிசுத்தப்படுத்து. அதனால் ஏழாவது நாள் ஒரு ஞாபக சின்னமாக ஓய்வுநாளாக அமைகிறது. ஆகவே அந்த நாளை அவர் ஆசீர்வதித்து அதை பரிசுத்தப்படுத்தி ஓய்வுநாளை பரிசுத் தமாய் ஆசரிக்கநினைப்பாயாக என்று ஆண்டவர் சொன்னார். அப்படி கடைப்பிடிக்கிறவர்களுக்கு ஆண்டவர் பெரிய ஆசீர்வாத ங்களை கொடுக்கிறார். என் ஓய்வுநாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமான வைகைளைத் தெரிந்துகொண்டு உடன்படிக்கையைப் பறறிக்கொள்ளுகிற அண்ண கர்களைக் குறித்துக் **கர்த்தர்** சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும்பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன் என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்.. ஏசாயா 56.4,5 என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி உன் காலை விலக்கி, உன்வழிகளின்படி, நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும் உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், **கர்த்தருடைய** பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது **கர்த்தரில்** மனமகிழ்ச்சியாயிருப்பாய், பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படிபண்ணி உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; **கர்த்தருடைய** வாய் இதைச் சொல்லிற்று. ஏசாயா 58.13,14 ஆகவே ஏராளமான ஆசிர்வாதங்களை ஆண்டவர் ஓய்வுநாளை கடைப்பிடிக்கிறவர்களுக்கு கொடுக்கிறார் என்று வேதம் திட்டவட்டமாக சொல்லுகிறது.

**ஐந்தாம் கற்பனை.**



தகப்பனையும் தாயையும் கனம் பண்ணாதவர்களுக்கு அவர்களது வாழ்க்கை காரிருளில் அணைந்துபோகும் என்று வேதம் சொல்லுகிறது. தகப்பனைப் பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும். நீதி 30.17 உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே வாழ்நாள் நீடித்தி ருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணு வாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. எபேசியர் 6.2,3 ஒருவன் தன் தகப்பனுக்கும் தாய்க்கும் மரியாதை கொடுத்தால்தான் கடவுளுக்கும் மரியாதை கொடுக்க முடியும்.







உன் தேவனாகிய **கர்த்தர்** உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. யாத் 20.12 இந்த கற்பனைக்கும் ஆண்டவர் விசேஷித்த ஆசீர்வாதத்தை கொடுக்கிறார். இன்றைக்கு ஆயுசு நாட்கள் குறைந்துகொண்டே வருகிறது. வேதம் சொல்லுகிற காரணம் தன் தாயையும் தகப்பனையும் கனம்பண்ணாமல் போகிறோம். தாய் தகப்பனும் முதிர்வயதாகிறபோது அந்த தள்ளாடு கிற வயதில் நாம் அசட்டைப்பண்ணாமல் அவர்களை ஆதரித்து கனம்பண்ணினோமென்றால் ஆண்டவர் நமக்கு கொடுக்கிறதேசத்திலே நம் நாட்கள் நீடித்திருக்க செய்கிறார். தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோம். நீதி 20.20

**ஆறாம் கற்பனை**

கொலை செய்யாதிருப்பாயாக. யாத் 20.13 கோபம்வராமல் கொலை செய்யமுடியாது. கணவனுக்கும் மணைவிக்கும் இடையே கோபம் வரகூடாது. பிள்ளைகளிடத்தில் கோபம் வரகூடாது. கோபத்தின் காரணமாக நாம் பாவம் செய்துவிடுகிறோம். கொலையும் தற் கொலையும் ஒன்றுதான் நம்முடைய உடம்பு தேவனுடைய ஆலய மாக இருக்கிறது. அவருடைய ஆலயத்தை தீட்டுப்படுத்தகூடாது. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன்

தேவனுடைய ஆலயத் தைக்கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்த மாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம். 1 கொரி. 3. 16, 17 **உடம்பை கெடுக்கிற காரியங்கள் இந்த உலகத்தில் அநேகம் இருக்கிறது அதை உட்கொண்டு நாம் நம் உடம்பை கெடுத்துக்கொண்டால் நாம் நம்மையே சிறுசிறுவாக நம் உடம்பை கொலை செய்துக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். சிகரெட் மிகவும் கொடியது அதை பிடித்து புகையை விழுங்கி வெளியே ஊதி ஊதி நம் ஈரளை துளைத்து கருக செய்கிறதே இது நாமாகதானே நம்மை கொலை செய்துகொள்கிறோம்? சிறுசிறுவாக நம் ஆயுசுநாட்கள் குறைந்துகொண்டே வருகிறது. இந்த மாதிரியே சாரயம் வெற்றி லைபாக்கு போதைபொருள் இன்னும் எவ்வளவோ தீய காரியங் களை நாம் உட்கொண்டு நாம் நம்மை சிறுசிறுவாக கொலைசெய்து கொள்கிறோம். நம்முடைய உடம்பு தேவனுடைய ஆலயம் என்று ஆண்டவர் சொல்லுகிறார். நமக்கு ஆண்டவர் 80 வயது என்று ஆயுசு வைத்திருந்தாரென்றால் நாமே 60 ஆக ஆக்கிக் கொள்கிறோம். நாம் நம்மையே ஆயுசை குறைத்துகொள்கிறோம்.**







## ஏழாம் கற்பனை

விபசாரம் செய்யாதிருப்பாயாக. யாத் 20. 14 **இந்த கட்டளை ஒரு விசேஷமானது.** ஸ்திரீயுடனே விபசாரம்பண்ணுகிறவன் மதிகெட்டவன்; அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவக் கெடுத்துப்போடுகிறான். **நீதி 6. 32 விபசாரம் செய்கிறவன் முட்டாள் என்றும் அவன் தன் ஆத்து மாவை கெடுத்துபோடுகிறான் என்றும் சொல்லுகிறது. இந்த விபசாரம் செய்கிறவர்கள் பரலோகம் போகமாட்டார்கள் என்று அநேக வேதவசனங்கள் சொல்லுகிறது.** வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான். 1 கொரி 6. 18 **வேசித்தனம் என்றால் கல்யாணம் ஆகாத ஆண்களிடத்திலும் பெண்களி டத்திலும் தப்பிதமாய் நடந்துகொள்வது வேசித்தனமாகிறது. விபசாரம் என்றால் கல்யாணமான ஆண்களிடத்திலும் பெண்களிடத்திலும் தப்பிதமாய் நடந்துகொள்வது. ஆகவே இரண்டும் ஒன்றுதான். சரீரத்திலே பாவம் செய்கிறதுதான் வேசித்தனம். நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமா யிருக்கிறது. அந்த ஆலயத்தை நாம் விபசாரத்திற்குள் உட் படும்போது அது ஒரு பெரிய பாவம் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.** ஏன் என்று கேட்கிறீர்கள்; **கர்த்தர்** உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன்தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம்பண்ணினாயே. அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரண மாயிருந்த தே. பின்னை ஏன் ஒருவனைப்படைத்தார்? தேவபக்தியுள்ள, சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம்பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். மல்கியா 2. 14. 15 **ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையை ஆண்டவர் நமக்காக கொண்டுவந்தாலும் நாம் பாவம்தான் செய்கிறோம். ஆகவே விபசாரம் பாவம் ஆண்டவருக்கு பிடிக்காத காரியம்.**

## எட்டாம் கற்பனை.

களவு செய்யாதிருப்பாயாக. யாத் 20. 15 **இன்னொருத்தருடைய பொருளை நாம் திருடினால் நம்முடைய பொருளை இன்னொ ருத்தர் திருடிகொண்டு போய்விடுவார்கள். நாம் எதை விதைத் தோமோ அதையே நாம் அறுப்போம். மற்றவனுடைய பொருள்மீது ஆசைப்பட்டு அதை திருடகூடாது. இது பாவம் என்று வேதம் சொல்லுகிறது.**




**ஒன்பதாம் கற்பனை.**

பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. யாத் 20.16 **பொய்சாட்சி கோர்ட்டிலே மாத்திரம் சொல்வதல்ல, நம்முடைய ஜீவியத்திலேயும் பொய்சொல்லகூடாது என்று ஆண்டவர் சொல்லுகிறார்.** ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின்மேல் பிரியப்படாமலும் இருங்கள்; இவைக ளெல்லாம் நான் வெறுக்கிற காரியங்களே என்று **கர்த்தர்** சொல்லுகிறார் சகரியா 8.17 **உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் அதற்கு மிஞ்சினது பாவமாயிருக்கும் என்று வேதம் சொல்லுகிறது.**

**பத்தாம் கற்பனை.**

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார். யாத் 20.17 **இச்சை பாவம் என்று வேதம் பேசுகிறது. சாப்பிடவேண்டாம் என்ற கனியை ஏவாள் இச்சித்தாள்.** ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே. ரோமர் 7.7 **இன்று உலக மக்கள் சாப்பாடு மேல் இச்சை, பொருள் மீது இச்சை, பெண்கள் மீது இச்சை, ஆண்கள் மீது இச்சையாக இருக்கிறார்கள். இன்றைக்கு இச்சை என்ற பாவம் உலகத்தில்**



**நிரம்பிகிடக்கிறது. ஆகவே இந்த பத்து கட்டளைகளை ஆண்டவர் நமக்கு தம் சொந்த விரலினாலே எழுதிக் கொடுத்தார். இந்த பத்து கட்டளைகள் நம் வாழ்க்கையில் நமக்கு ஒரு வேலியாக இருக்கவேண்டும். நம்மை பரிசுத்தமாக ஆக்கவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகின்றார். இதை எப்படி கைக்கொள்வது என்று நமக்கு குழப்பமாக இருக்க லாம்.** நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள். மத் 14.15 **ஆண்டவரிடத்தில் நான் அன்பு வைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவருடைய கட்ட ளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். அந்த பத்து கட்டளை களுக்கு நாம் கீழ்படிய ஆண்டவரிடத்தில் உதவி கேட்க போமாக! நம்மால் முடியாது என்று நாம் மறுதலிக்கமுடியாது** என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு. பிலிப்பியர் 4.13 **ஆகவே நமக்கும் ஆண்டவர் பெலன் தருவார். நாமும் பரிசுத்தமாக அந்த பத்துகட்டளைகளை கடைப்பிடிக்க பிரயாசப்படுவோம். செய்த பாவமெல்லாம் போதும் ஆண்டவரிடத்திலே பாவமன்னிப்பை பெற்றுகொண்டு பரிசுத்தமாய் வாழ்வோம். இதற்காகதானே அவர் சிலுவையில் அறையப்பட்டார். ஆகவே நம் பாவங்களை அவரிடத்தில் வைத்துவிட்டு நாம் முழுமனதோடு அவர் கட்டளைகளை கடைபிடிப்போம் ஆமென்.**


நாம் தேவனுடைய கற்பனைகளைக்
கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு
கூருவதாம்; அவருடைய கற்பனைகள்
பாரமானவைகளுமல்ல.
1 யோவான் 5:3